பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 02 செவ்வாய்க்கிழமை 17.12.2024 | அதிர்வு 138

## யாழில் எலிக்காய்ச்சலால் இதுவரை 99 பேர் பாதிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோய் காரணமாக இதுவரை 99 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# புதிய சபாநாயகராக ஜகத் விக்கிரமரத்ன ஏகமனதாகத் தெரிவு

## சகல கட்சித் தலைவர்களும் வாழ்த்து






02

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சபாநாயர் தேர்வின்போது ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 02

## சாவகச்சேரி நகர சபை முன்றிலில் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். சாவகச்சேரி நகர வர்த்தகர்களும், பொது மக்களும் சாவகச்சேரி நகர சபை முன்றலில் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி நகர சபையால் அண்மையில் கட்டப்பட்ட புதிய கடைகளைக் 04



# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**புதிய சபாநாயகராக...**

பத்தாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராகச் செயற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல அண்மையில் சபாநாயகர் பதவியிலிருந்து இராஜிநாமா செய்ததன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்கு வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்ன இவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்.

அதற்கமைய, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவினால் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜகத் விக்கிரமரத்னவின் பெயர் முன்மொழியப்பட்டதுடன், சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க அதனை வழிமொழிந்தார்.

புதிய சபாநாயகரை முன்மொழிந்து, வழிமொழிந்த பிரதமர் மற்றும் சபை முதல்வரினால் சம்பிரதாயபூர்வமாக புதிய சபாநாயகர் தனது ஆசனத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அதன் பின்னர் புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

அதனையடுத்து, சபாநாயகராகத் தன்னைத் தெரிவு செய்தமைக்கு நன்றி தெரிவித்த சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் மரபுகளுக்கு அமைய சுயாதீனம், கௌரவம் மற்றும் அனைத்து உறுப்பினர்களினதும் உரிமைகளைப் பாதுகாத்துப் பொதுமக்களின் நலனுக்காகப் பணியாற்ற அர்ப்பணிப்பதாகத் தெரிவித்தார்.















# புத்தகயாவில் ஆசி பெற்ற ஜனாதிபதி

புத்தகயாவுக்கு இன்று சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க, சித்தார்த்த இளவரசர் ஞானம் பெற்ற இடத்தில் அமைந்துள்ள மகா விகாரை மற்றும் ஸ்ரீ மகா போதி என்ப வற்றைத் தரிசித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

இந்திய மகாபோதி சங்கத்தின் பொதுச்செயலாளர் வண. பெலவத்தே சீவலி தேரர் மற்றும் சாரநாத் மையத்தின் விகாராதிபதி வண. ரத்மல்வல சுமித்தா னந்த தேரர் ஆகியோர் ஜனாதிபதிக்கு ஆசிர்வாதம் வழங்கினர்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபி விருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகி யோரும் இதன்போது கலந்துகொண் டிருந்தனர்.





# வவுனியாவில் தொடர்ச்சியாக வாகனப் பற்றரிகள் திருட்டு!

## இரண்டு சந்தேகநபர்கள் கைது




(கி.வசந்தன்)

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடம் ஒன்றில் வாகனப் பற்றரிகளைத் தொடர்ச்சியாகத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வாகனத் தரிப்பிடத்தில் வாகனப் பற்றரிகள் களவாடப்பட்டுள்ளன என்று நெளுக்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே. திவுல்வெவவின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இரகசிய விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது நான்கு வாகனப் பற்றரிகளுடன் இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், குறித்த குற்றச்செயலுக்குப் பயன்படுத்தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் ஓட்டோ ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில் எலிக்காய்ச்சலால்...

என்று யாழ. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் பரவல் தொடர்பாக ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 23 பேரும், யாழ். போதனா வைத்தியசாலையில் 6 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த 24 மணிநேரத்தில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 9 நோயாளர்களும், யாழ் போதனா வைத்தியசாலையில் 5 நோயாளர்களும் எலிக்காய்ச்சலுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் இந்த நோய் காரணமாக எந்தவொரு இறப்பும் ஏற்படவில்லை. இதுவரை யாழ். மாவட்டத்தில் இந்த நோய் காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

எலிக்காய்ச்சல் நோய் வராமல் தடுப்பதற்காகத் தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. யாழ். மாவட்டத்தில் இதுவரை ஏறத்தாழ 6 ஆயிரம் பேருக்குத் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் காய்ச்சல் நோயாளர்களை இனங்காண்பதற்காக சுகாதாரப் பணியாளர்கள் வீடுவீடாகச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கால்நடைகளில் இந்தக் கிருமித்தொற்று உள்ளதா என்பதை ஆய்வு செய்வதற்காகக் கொழும்பிலிருந்து கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திலிருந்து குழு ஒன்று யாழ். மாவட்டத்துக்கு நாளை வருகை தரவுள்ளது." - என்றார்.

### சாவகச்சேரி...

குத்தகைக்கு வழங்குவதற்காகப் பகிரங்கமாகக் கேள்வி கோரப்பட்டுள்ளது.

கடைகளை கட்ட ஆரம்பிக்கும்போது 2000 ஆம் ஆண்டு யுத்தத்தில் கடைகள் அழிவடைந்த வர்த்தகர்களுக்குப் புதிய கடைத் தொகுதியில் முன்னுரிமை அடிப்படையில் கடைகள் வழங்கப்படும் என நகர சபையால் உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வாக்குறுதியை மீறி கேள்வி கோரப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விண்ணப்பதாரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்க வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்க வேண்டும் என்றும் கோரியுமே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.





இதன்போது போராட்டக்காரர்கள் நகர சபையின் பிரதான நுழைவாயிலைப் பூட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதையடுத்து அங்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் பூட்டை உடைத்து அகற்றியதோடு போராட்டகாரர்களைக் கலைக்க முற்பட்டனர்.

இதனால் நுழைவாயிலில் அமர்ந்தவாறு அவர்கள் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தத் தருணத்தில் நகர சபை வாகனங்களுக்குப் பொறுப்பான அதிகாரி கழிவகற்றும் உழவு இயந்திரத்தால் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது மோத முயற்சித்ததோடு அதை வீடியோ எடுத்த ஊடகவியலாளரையும் கடுமையாக அச்சுறுத்தினார். இதனால் அங்கு கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேவேளை, குறித்த கேள்வி கோரலை இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# திரிசாரணர் பிரிவில் சாரணர் பேடன் பவல் விருதைப் பெற்ற வவுனியா மாவட்ட மைந்தன்





**(கி.வசந்தன்)**

திரிசாரணர் பிரிவில் சாரணர் பேடன் பவல் விருதைப் பெற்றுக் கொண்ட வவுனியாவைச் சேர்ந்த 2 ஆவது நபராகக் கணேசலிங்கம் யதுகணேஷ் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். 11 வருடங்களின் பின் இந்தச் சாதனையை அவர் செய்துள்ளார்.

இலங்கை சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தால் வழங்கப்படும் திரிசாரணர் பிரிவின் உயர் விருதான பேடன்பவல் விருதை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவனும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீடப் பட்டதாரியும், தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தற்காலிகப் பயிற்றுவிப்பாளராகப் பணியாற்றுகின்றவருமான கணேசலிங்கம் யதுகணேஷ் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் வவுனியா மாவட்ட சாரணர் கிளையின் சமாதானத்தின் தூதுவரின் மாவட்ட இணைப்பாளர் ஆவார். அத்துடன், ஜப்பானில் நடைபெற்ற சர்வதேச ஜம்போரியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய பெருமையும் அவருக்கு உண்டு.

வவுனியாவுக்கு முதலாவது பேடன் பவல் விருதானது 2013 ஆம் ஆண்டு சுந்தரலிங்கம் காண்டீபனுக்குக் கிடைத்தது. 11 வருடங்களுக்குப் பின்பு, இரண்டாவது பேடன்பவல் விருது 2024.12.16 அன்று கணேசலிங்கம் யதுகணே/க்குக் கிடைத்துள்ளது.

# கூலர் வாகனத்துடன் மோதுண்ட யானை!

## உயிருக்குப் போராட்டம்





**(கி.வசந்தன்)**

செட்டிகுளம் – மன்னார் வீதியில் கூலர் வாகனத்துடன் மோதுண்ட யானை ஒன்று காயமடைந்த நிலையில் வீதியருகில் வீழ்ந்து கிடக்கின்றது.

இன்று அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம் – மன்னார் வீதியில் உள்ள பெரியகட்டுப் பகுதியில் வீதியில் நின்ற யானை ஒன்றுடன் மன்னாரில் இருந்து மதவாச்சி நோக்கி மீன்களை ஏற்றிக்கொண்டு அந்த வீதியால் வந்த கூலர் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானது. கூலர் வாகனம் கடுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த யானை வீதியோரத்தில் உள்ள நீர் உள்ள குழி ஒன்றில் காயத்துடன் வீழ்ந்து கிடந்து உயிருக்குப் போராடுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குப் பொது மக்களால் தகவல் வழங்கப்பட்டதையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தால் யானைக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழரசின் பவள விழா

கடந்த பொதுத் தேர்தலிலும் தமிழர்களுடைய முன்னணி கட்சி தானே என்பதை மீண்டும் நிருபித்திருக்கும் இலங்கை தமிழரசு கட்சிக்கு நாளைய தினம் மிக முக்கியமான நாளாகும்.

சரியாக 75 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில்தான் இலங்கை தமிழரசு கட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பில் அரச எழுது வினைஞர்கள் சேவை யூனியன் மண்டபத்தில் சுமார் அறுபது தமிழ்ப் பிரமுகர்கள் கூடி இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஸ்தாபிதம் செய்தனர்.

அந்த அறுபது பேரில் இருவர் நாடாளுமன்ற உறுப்பினர்கள். இருவர் செனட்டர்கள்.

காங்கேசன்துறை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் சி. வன்னியசிங்கம். இருவரும் சட்டத்தரணிகள். இ.மு.வி. நாகநாதன், எஸ். பரமநாயகம் ஆகியோர் செனட்டர்கள். இருவருமே மருத்துவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து இலங்கை தமிழரசுக் கட்சி உருவானது.

தமிழ் தேசியத்தை நிலை நிறுத்தும் தனித்துவமான சிந்தனை, தமிழர்களுக்கு என்று தனியான சுயாட்சி அலகை நிறுவும் நோக்கோடு உருவாக்கப்பட்ட தமிழரசு கட்சியின் ஸ்தாபிதத்தோடுதான் தமிழர் தாயகத்தில் பிறப்பெடுத்து, ஆழமாக வேரூன்றியது என்று சொன்னால் அது மிகை அல்ல. இலங்கை தமிழரசு கட்சியின் உருவாக்கமும் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டும் சமஷ்டிக் கோரிக்கையும் ஒன்றாக உருவெடுத்தன.

அன்று முதல் தமிழ் மக்களின் ஜனநாயக விருப்பத்தை சுயாதீனமாக வெளிப்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பங்களில் எல்லாம் தமிழரசுக் கட்சி தமிழர்களுடைய தேசிய சக்தியாக முன்னிலைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு வருவது முக்கியமான விடயமாகும்.

சுதந்திர இலங்கையின் முதல் நடவடிக்கையாக மலையகத் தமிழ் சகோதரர்களின் குடியுரிமையை பறிக்கும் அடக்கு முறையை பௌத்த - சிங்கள பேரினவாத மேலாதிக்கம் ஏவிவிட்ட போது, அப்போது தமிழ் மக்களினுடைய பிரதிநிதித்துவ உரிமையை பெற்றிருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அந்த விடயத்தில் நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் முழுமையாக அதனை எதிர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்ற வேதனைதான் - சீற்றம்தான் - தமிழரசு கட்சியின் பிறப்பாக்கத்துக்கு வழி செய்தது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அன்று தொடக்கம் - அதன் உருவாக்கம் முதல் - இன்று வரை பௌத்த, சிங்களப் பேரினவாதம் சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடக்குமுறையை ஏவி விடுகின்ற போது அவற்றுக்கு எதிராக காத்திரமாகக் குரல் கொடுக்கும் - எதிர்த்துப் போராடும் - சிறுபான்மை மக்களை அணிதிரட்டி ஒன்றுபட்டு எதிர்க்கும் - தன் கடமையை தமிழரசுக் கட்சி பொறுப்போடு ஆற்றி வந்திருக்கிறது என்பது மறக்க, மறுக்க முடியாத உண்மை.

ஆயினும் இந்த முக்கால் நூற்றாண்டு பணியில் கடந்து 10 வருடங்களாக அதன் செயற்பாடு மிக மோசமான கட்டத்தை - பின்னடைவை - எட்டி இருப்பதும் மறுக்க முடியாதது.


தந்தை செல்வா முதல், தளபதி அமிர்தலிங்கம், சம்பந்தன் ஐயா வரை மூத்த தலைவர்கள் வழி நடத்திய கட்சி இன்று நீதிமன்றத்தில் அல்லாடுகின்றது.

இந்த வருடம் இப்போது கொண்டாட வேண்டிய பவள விழாவை இரண்டு வருடங்களுக்கு முன்னரே கொண்டாடிய சிறுமைத்தனமான தலைமை இப்போது.

தற்சமயம் அதன் 75 ஆவது ஆண்டு நிறைவே கொண்டாட முடியாத நிலையில் கட்சி இக்கட்டில் மாட்டி இருக்கின்றது.

பதவி ஆசை மிக்கவர்களின் கைகளில் கட்சித் தலைமை விழுந்தமையால் கட்சியின் மத்திய குழுவைக் கூட ஒழுங்காக நடத்த முடியாத அவல - அபத்த - நிலை ஏற்பட்டிருக்கின்றது.

முக்கால் நூற்றாண்டு கால சரித்திரம் கொண்ட தமிழர்களின் பழமையான கட்சியை இந்த நிலைமைக்கு கொண்டு சென்ற தலைவர்கள் காலம் காலமாக அந்த வரலாற்று தவறுக்காக மக்களினால் நிரந்தரமாக எப்போதுமே நிந்திக்கப்படும் ஒரு பெயரையே தங்களுக்கு நிரந்தரமாக விட்டு செல்வார்கள் என்பது கண்கூடு.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# மாவட்ட இலக்கிய போட்டியில் கற்பிட்டி மாணவி முதலிடம்!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தளம் மாவட்ட செயலகம் இணைந்து நடத்திய மாவட்ட இலக்கியப் போட்டித் தொடரில் சிறுகதை ஆக்க போட்டியில் "கோடை மழை" எனும் தலைப்பில் சிறுகதையை எழுதிய கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.ஜே.பாத்திமா டில்ஷா அதி சிரேஷ்ட பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

மேலும் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கற்பிட்டி பிரதேச செயலகம் இணைந்து நடத்திய பிரதேச இலக்கியப் போட்டித் தொடரில் சிறுகதை ஆக்க போட்டியில் முதலாம் இடத்தையும் கல்வியின் சிறப்பு எனும் கவிதை போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ள இவர் கற்பிட்டியைச் சேர்ந்த யூ.எம் ஜனாப் மற்றும் எம்.டீ.சரீபா ஆகியோரின் மூத்த புதல்வியாவார்.




# கதிரவெளிப் பிரதேச வைத்தியசாலையில் ரோட்டறிக் கழகத்தால் இரத்ததான முகாம்

(பழுவூரான்)

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரனின் ஒழுங்கு படுத்துதலின் கீழ் மட்டக்களப்பு ரோட்டரிக்கழகத்தின் அனுசரணை யுடன், கதிரவெளி பிரதேச வைத்திய சாலையில் இரத்ததான முகாமொன்று நடத்தப்பட்டது.

பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி ஜே.பீ.நிரோஜன் தலைமையில் நடைபெற்ற இரத்ததான முகாமில், வைத்தியர் கே.டீ.ஜீ. குசல்லா குருகே, பல்வைத்தியர் என்.எம்.சன்பர், இரத்த வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பொலிஸ், இராணுவ உத்தியோகத்தர்கள், பிரதேச வாழ் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டு ஆர்வத்துடன் குருதிக்கொடை வழங்கினர்.

இந்த வருடத்தில் கதிரவெளி பிரதேச வைத்தியசாலையால் மேற்கொள்ளப் பட்ட இரண்டாவது இரத்ததான முகாம் இது என்பது குறிப்பிடத்தக்கது.





# இந்தியத் தூதர் பங்கேற்புடன் முள்ளியவளையில் நத்தார்

(பா.சதீசன்)

இலங்கைக்கான இந்தியத் தூதர் பங்கேற்புடன் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் ஏற்பாட்டில் முள்ளியவளையில் மாபெரும் நத்தார் பெருவிழா இடம்பெற்றது.

“நேசக்கரம் நீட்டிடுவோம் ஒன்றாய் இணைந்திடுவோம்” எனும் தொனிப்பொருளில் முள்ளியவளையில் தனியார் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை சிறார்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சமாதான புறா பறக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமாகிய இந்த மாபெரும் நத்தார் விழாவானது இலங்கை மிஸ்பா ஜெப மிஷனரி சபையின் தலைமைப் போதகரும், ஸ்தாபகருமான ஜெயம் சாரங்கபாணி தலைமையில் இடம்பெற்றது.



நத்தார் நிகழ்வில் சிறார்களின் நடன நிகழ்வு இடம்பெற்றது. இன,மத,மொழி பேதமின்றி 400 இற்கு மேற்பட்ட சிறார்களுக்கு இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.





# சுகாதாரத்துறையில் சிறந்து விளங்கிய பிரதானிகளுக்கு விருதுகள் வழங்கல்

(ஏ.எல்.றியாஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பிரதேச வைத்தியசாலைகளின் சேவை தரப்படுத்தலில் பாலமுனை பிரதேச வைத்தியசாலை முதலாமிடத்தைப் பெற்று சிறந்த வைத்தியசாலைக்கான விருதைப் பெற்றுக்கொண்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களைப் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் திங்கட்கிழமை (16) இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், சுகா தாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 2024 ஆம் ஆண்டில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட பிரதேச வைத்தியசாலைகளின் சேவை தரப்படுத்தலில் சிறந்த சுகாதார நிறுனங்களாக தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று வைத்தியசாலைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அத்துடன் அதன் பிரதானிகளும் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டனர்.

இதேவேளை தேசிய ரீதியாக விருதுகளைப் பெற்றுக் கல்முனை பிராந்தியத்துக்குப் பெருமை சேர்த்த கல்முனை பிராந்திய ஆய்வுகூடம் மற்றும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை என்பவற்றுக்கும் இந்த நிகழ்வின் போது விருது வழங்கப்பட்டது.

அத்துடன் ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்தவர்கள் மற்றும் பிராந்திய சுகாதாரத்துறைக்கு அளப்பெரும் சேவையாற்றி சுகாதார அமைச்சால் பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட பிராந்திய பிரிவுத் தலைவர்களும் இந்த நிகழ்வின் போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.






# சிரேஷ்ட ஊடகவியலாளர் நபாயிஸ்க்கு 'இளங்கலைஞர் விருது' வழங்கப்பட்டது





(அபு அலா )

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற 2024 மாகாண இலக்கிய விழாவில் மருதமுனையைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் றாஷிக் நபாயிஸ் ஊடகத்துறைக்கான 'இளங்கலைஞர் விருதை' பெற்றுக்கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜி. திசாநாயக்கதலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற விழாவின் போதே அவர் கௌரவிக்கப் பட்டார்.

2007 ஆம் ஆண்டிலிருந்து ஊடகப் பணி மற்றும் சமூகப்பணியில் தன்னை அடையாளப்படுத்திச் செயற்பட்டு வரும் இவர், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் பிராந்திய செய்தியாளராகச் செயற்பட்டு, அதிக சமூகம்சார் கட்டுரைகள், பொது விடயங்கள் பற்றிய விழிப்புணர்வு ஆக்கங்களை எழுதி பொது மக்களுக்கு பல விழிப்புணர்வுகளை வழங்கிவருகின்ற ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளர் ஆவார்.

பொது அறிவு அறிமுகத் தொகுப்பு, யூரோ நாணய அறிமுகத் தொகுப்பு, ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி, மருதமுனை சமாதான நீதிபதிகள், அனர்த்தங்களும் நாமும் மற்றும் அழைப்போம் பயன்பெறுவோம் எனும் ஆறு நூல்களை எழுதி மக்கள் மத்தியில் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

# மயோன் சமூக சேவை அமைப்பினர் ரிஷாத் பதியூதீன் எம்.பியுடன் சந்திப்பு

## மக்களது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்டத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் மயோன் சமூக சேவை அமைப்பின் பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனை வெள்ளவத்தையில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அமைப்பின் தலைவரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான றிஸ்லி முஸ்தபா தலைமையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அம்பாறை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் அமைப்பின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது அமைப்பின் கடந்த கால செயற்பாடுகள், எதிர்கால திட்டங்கள் குறித்து அமைப்பின் பொதுச் செயலாளர் சுகையில் ஜமால்தீன் விவரித்தார்.

அத்துடன் இளைஞர்களின் நலன் கருதி கட்சியால் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை றிஸ்லி முஸ்தபா சமர்ப்பித்தார்.



இவ்வாறான செயற்பாடுகளுக்குத் தன்னால் முடியுமான பங்களிப்புகளை வழங்குவார் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் உறுதியளித்துள்ளார்.



# ‘ரணவீம’ நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காரைதீவில் வீடுகள் கையளிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

காரைதீவு பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவால் “ரணவீம” நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் காரைதீவு 4ஆம், 09ஆம் கிராம நிலதாரி பிரிவுகளில் நிறைவடைந்த வீடுகளை திறந்து வைக்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளராக இருந்து அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பதவி உயர்வு பெற்று சென்ற சிவஞானம் ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு “ரணவீம” நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை திறந்து வைத்தார்.

இதன்போது காரைதீவு பிரதேச உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.எம். அச்சு முஹமட், பிரதேச செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் ரீ. தவேந்திரன், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# போருக்குள் வாழ்ந்த எழுத்தாளர் ஆ.ந.தீயின் நூல்கள் வெளியீடு!

(ஜங்கரன் விக்கினேஸ்வரா)

தேசத்துக்கான காலக் கடமையில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்து நின்ற எழுத்தாளர் ஆ.ந.தீயின் மூன்று நூல்களின் வெளியீடு நேற்று முன்தினம் (15) ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் வென்ட்வேத்வில் சமுதாய மண்டபத்தில் நடைபெற்றது.

அவுஸ்திரேலியா தமிழ்த்தாய் பதிப்பக வெளியீடாக 'காலத்தின் பரிசு' எனும் சிறுகதை நூலும், 'சாகாத சான்று' எனும் குறும் புதின நூலும் 'பகலாகிய இரவுகளும் இரவாகிய பகல்களும்' எனும் தலைப்பில் பொதுக் கட்டுரை ஆக்க நூலும் இந்த நிகழ்வில் வெளியாகின.

எழுத்தாளர் ஆ.ந.தீயின் துணைவியும் அவரின் மகனும் போர் வாழ்வின் வலிகளைக் கடந்தும் தொடரும் இடர்களை எதிர்கொண்டபோதும், விடுதலைப் பணியாகக் காலத்தின் பதிவுகளை மூன்று நூல்களாக வெளியீட்டு வைக்கின்றனர்.

எழுத்தாளர் ஆ.ந.தயால் போருக்குள்ளும் போரின் பின்னரும் எழுதிய படைப்புக்களின் வெளியீடான இந்த நூல் வெளியீட்டு விழாவில் பெருந்திரளான சிட்னி மக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பல இலக்கிய ஆர்வலர்களும், தமிழ் பற்றாளர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

கடந்த முப்பதாண்டு காலமாக எழுதி வரும் படைப்பாளியான ஆ.ந.தீ என்ற பெயரில் மட்டுமன்றிக் கற்பகன், வர்ணன், ஆ.ந.பொற்கோ, பொலிகையூரான், நகுலா ஆனந்தன், தீவண்ணன், வைகை ஆகிய புனைபெயர்களிலும் எழுதி வந்துள்ளார். தான் பிறந்து வளர்ந்த மண்ணின் மீதான பெருவிருப்பே இவரது படைப்புகளின் கருக்களாய் உருப்பெற்றிருக்கின்றன.

நாம் கடந்து வந்த வாழ்வை, நாம் சந்தித்த மனிதர்களை மீண்டும் நினைவுபடுத்திப் பார்க்கச் செய்யும் படைப்புகள் இவை. அந்த வகையில் இக்கதைகள் ஒரு காலத்தின் கதைகள். ஒரு காலத்தின் துயரங்கள். பல ஆண்டுகளாக எமது மண் சந்தித்த பல துயர வரலாற்றையும் அதனால் எழுந்த வாழ்வியல் கோலங்களையும் தியாகங்களையும் பேசும் படைப்புகள் என்று மூத்த தமிழ் பெண் எழுத்தாளர் திருமதி தாமரைச் செல்வி தெரிவித்துள்ளார்.





# அண்மைய மழை வெள்ளம் காரணமாக கிண்ணியாவில் வேளாண்மை பாதிப்பு!

## விவசாயிகள் கவலை தெரிவிப்பு





(எச். எம். ஹலால்தீன்)

அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக கிண்ணியாவில் பல ஏக்கர் வேளாண்மை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட சோலை வெட்டுவான், மயிலப்பஞ்சேனை, கண்டக்காடு முதலான பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மை மழை வெள்ளம் காரணமாக நீரில் மூழ்கி அழிந்துள்ளது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் சுமார் 200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு செய்கை பண்ணப்பட்ட வேளாண்மைகளை விட புல் அதிகமாக காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயத்தை நம்பி வாழும் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதோடு அரசு இதற்கான கவனம் செலுத்தி இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்று கூறுகின்றனர்.





# தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் நினைவேந்தல் நிகழ்வுகள் பிரான்ஸில்

தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 18 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிரான்ஸ் பொண்டிப் பிரதேசத்தில் நடைபெற்றது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பிரான்சு மாவீரர் பணிமனையின் ஏற்பாட்டில் பொண்டி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரைப் பொண்டி தமிழ்ச் சங்கத் தலைவர் ஏற்றிவைக்க, மாவீரர் பொதுப் படத்துக்கான ஈகைச் சுடரை கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இடம்பெற்ற சமரில் வீரச்சாவடைந்த லெப்டினனட் நிலவனின் சகோதரி ஏற்றிவைத்து, மலர் வணக்கம் செலுத்தினார்.

தேசத்தின் குரல் பாலாவின் திருவுருவப் படத்துக்கான ஈகைச் சுடரை முல்லைத்தீவு, விசுவமடு, 12 ஆம் கட்டைச் சந்தியில் இந்திய இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்த லெப்டினனட் மரியாவின் சகோதரன் ஏற்றிவைத்து மலர் வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொண்டி தமிழ்ச் சோலை, சென்டனி தமிழ்ச் சோலை, நுவசி சாம் தமிழ்ச் சோலை ஆகிய பள்ளி மாணவர்களின் எழுச்சி நடனம் மற்றும் கவிதை, பேச்சு என்பவற்றுடன் தமிழர் கலை பண்பாட்டுக் கழகக் கலைஞர்களின் பாடல்களும் இடம்பெற்றன.

நினைவுரையை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர் செங்கதிர் ஆற்றினார்.

நிறைவாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற பாடலுடனும் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்துடனும் நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன.









# எதைநோக்கி பயணிக்கிறது சமூகம்...?



மனிதனாகப் பிறந்த ஒவ்வொருதருக்கும் தேவை என்பது இன்றியமையாத ஒன்றாக உள்ளது. இந்தத் தேவையை நிவர்த்தி செய்ய முற்படுகின்ற போது உயிரினங்களுக்கு இடையே தொடர்பாடலின் அவசியம் உணரப்பட்டது. பண்டைய காலத்தில் மூதாதையர்கள் புகை மூட்டுதல், ஒலி எழுப்புதல் என தமது குழுவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். கால ஓட்டத்தில் வரலாற்று ரீதியான மாற்றங்களுக்கு ஏற்ப அறிவு வளர்ச்சியில் முன்னேற்றம் ஏற்பட சிற்பங்கள், ஓவியங்கள், திசைகாட்டிகள் என தொடர்பாடல் வளர்ச்சி அடைந்தது.

தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னர் வெகுசன ஊடகங்களின் ஊடாகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் அளவு வளர்ச்சியை அடைந்துள்ளது. பத்திரிகை மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்றாக இடம்பிடிப்பதற்கு காரணம் பண்டைய காலத்தில் தகவல் பரப்பும் ஊடகங்களின் வளர்ச்சியே பத்திரிகையின் தோற்றத்துக்கு அடித்தளமாகின்றமையே.

1450 களில் அச்சு இயந்திர கண்டுபிடிப்பை தொடர்ந்து பத்திரிக்கை துறை வளர்ச்சி அடைய ஆரம்பித்தது. 17 ஆம் நூற்றாண்டில் பத்திரிக்கையின் தேவை உணரப்பட்டது. புவியியற் பரப்பை கடந்த எண்ணிக்கையற்ற கண்ணுக்கு புலப்படாத பெறுனர்களை பத்திரிகை தன்வசம் ஈர்த்து வெகுசன ஊடகமாக வளர்ச்சி பெற்றுள்ளது. வெகுசன ஊடகங்களாக வானொலி, தொலைக்காட்சி, சினிமா என்ற வரிசையில் பத்திரிகை மிக முக்கிய இடத்தை பிடித்திருக்கின்றது .

1605 இல் Relation என்ற பத்திரிக்கை உலகின் முதன் முதலில் ஜேர்மனி நாட்டில் வெளியானது. 1785 The Times பத்திரிக்கை பிரித்தானியாவில் வெளியானது. இது உலகின் முன்னணி பத்திரிகைகளில் ஒன்றாக மாறி அச்சுத் தொழில்நுட்பத்தின் மேம்பாட்டுடன் ஒரு புதிய தலைமுறை தொடங்கியுள்ளது எனலாம்.

19 ஆம் நூற்றாண்டில் நாட்டின் உள்நாட்டு கலவரங்களின் போது மக்களின் இன்ப, துன்பங்களைச் சுமந்து வந்த பத்திரிகைகள் அன்று முதல் இன்றுவரை தமது பணியை போர்க்காலத்திலும், சவால்கள் மத்தியிலும் சிறப்பாக ஆற்றி வருகின்றன.

பத்திரிகைகள் நாளிதழ், வாரம், மாதம், ஆண்டு என பலவகையாக வாசர்களின் தேவை அறிந்து ஒவ்வொரு வயது பிரிவினருக்கும் உரிய தகவல்களை உள்ளடக்கியதாக வெளியிடப்படுகின்றன. பத்திரிக்கையில் உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் இடம் பெறுகின்ற செய்திகளும் ஏதோ ஒரு வகையில் செய்திப் பெறுமாணத்தைப் பெற்று பத்திரிகையில் இடம் பிடித்தாலும் இடம்பிடிக்காத செய்திகளும் உள்ளன. இன்றைய செய்திகள் நாளைய வரலாறாக மாற்றம் அடைகின்றது. ஒவ்வொரு சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப செய்திகள் முக்கியம் பெறுகின்றன. செய்திகள் 5றுர் என்ற வினாக்களுக்கு விடை தரும் வகையில் தலைகீழ் கூம்பக வடிவில் அமைக்கப்பட்டு நேர்த்தியாகவும் விரைவாகவும் மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பிக்கப்படுகின்றது.

பத்திரிகையின் வளர்ச்சி ஆரம்பிக்கும் போது அரசியல், பொருளாதாரம், கல்வி, பண்பாடு என்று மக்களுக்குத் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் பற்றி தெரியப்படுத்துவதாக அமைந்தன. தொழில்நுட்ப வளர்ச்சி கட்டத்தில் போட்டி தன்மையை சமாளிக்கவும் வணிக சுற்றுவட்டத்தில் நின்று நிலைக்கவும் பொழுதுபோக்கு அம்சங்களையும் விளம்பரங்களையும் அதிகம் உள்வாங்குகின்றன. உதாரணமாக ஆய்வுகளின்படி ஆரம்பத்தில் 60 சதவீத தகவல்களும் 40 சதவீத விளம்பரங்களுமாக வெளிவந்தன தற்போது 60 சதவீத விளம்பரங்கள் இடப்பட்டதன் பின்னரே 40 வீத தகவல்கள் நிரப்பிகளாக உள்ளடக்கப்படுகின்றது.

பத்திரிக்கை வாசிப்பதால் அரசியல் பொருளாதாரம், பண்பாடு, கல்வி என பல்வேறு துறைகளில் மக்களுக்கு பல விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. வாசிப்பு திறன் அதிகரிப்பதுடன் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. மொழி மற்றும் பேச்சு திறன் அதிகரிக்கின்றது. மாணவர்கள் புதிய விடயங்களை தெரிந்து கொள்ள முடிவதுடன் பொது அறிவு சார்ந்த ஆற்றலை வெளிப்படுத்தும் தளமாகவும் அமைகின்றது .பனிப்போர் நாடுகளுக்கு இடையில் ஏற்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக இணையத்தை அடிப்படையாகக் கொண்டு ஊடக ஒருங்கிணைவு தோற்றம் பெற்றது. இதனால் ஒரு தளத்தின் ஒருவருக்கு தேவையான அனைத்து விடயங்களையும் பெறக்கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக online banking, Alibaba.com.

21 ஆம் நூற்றாண்டின் டிஜிட்டல் மயமாக்கத்தால் சிறுவர்கள் மத்தியில் பத்திரிக்கை வாசிக்கும் பழக்கம் குறைவடைந்து செல்வது ஆய்வுகள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் கொவிட்-19 காலப் பகுதியின் பின் பெரும்பாலான மாணவர்களின் கையில் தொலைபேசி இலகுவாக வந்தடைந்ததை தொடர்ந்து சமூக ஊடகப் பாவனை சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பாரிய விளைவை ஏற்படுத்தி உள்ளது. அதில் நன்மையான விடயமாக பத்திரிக்கையின் அடுத்த கட்ட வளர்ச்சி மக்கள் எந்த இடத்தில் எந்த நேரத்திலும் தகவலை பெறும் வகையில் WhatsApp, Instagram, Facebook, Twitter போன்ற சமூக ஊடகங்களின் மூலம் பத்திரிகை e-paper ஆக வெளிவருகின்றது. இவை எளிதில் அணுக கூடியவையாகவும், துல்லியமானதாகவும்,வேகமானதாகவும் மற்றும் செய்தியை விரைவாக வழங்கும் தன்மையுடையதாகவும் வெளிவருகின்றன. உதாரணமாக ஒரு நாளில் இரண்டு பத்திரிகையாக காலை, மாலை என பிரித்து வெளிவருதல்.

இவ்வாறு வளர்ச்சி அடைந்துவரும் சமூக ஊடகங்கள் பத்திரிகைக்குப் போட்டியாகக் காணப்பட்டாலும் பத்திரிகை என்றால் மக்கள் மத்தியில் தனி இடத்தை என்றும் பிடித்துள்ளன. காரணம் தகவல்களின் நம்பகத்தன்மையும் முழுமையும் ஆகும்.

பத்திரிகையை பொறுத்தவரையில் இன்று பல பொருளாதார சவால்களை எதிர்கொள்கின்றன. அச்சு பத்திரிகையின் விலைகள் உயர்ந்துள்ளதால் குறைந்த வருமானம் பெறும் வாசகர்கள் பத்திரிகை வாங்குவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இதன் காரணமாக பத்திரிகையின் முன்னேற்றத்துக்குப் பொருளாதார நிலை தடையாக அமைகின்றது.

பத்திரிகையின் இன்றைய நிலை மிகவும் சவால்களுடன் உள்ளது. அதிலும் சமூக ஊடகங்களின் வருகையோடு பத்திரிகை துறை அதன் சக்தியை இழக்காத போதிலும் அதன் நம்பகத்தன்மையைக் காக்க வேண்டும். பத்திரிகைகள் புதிய தலைமுறை முன்னின்று வழிநடத்தவும் அதன் மூலம் சமூக மாற்றங்களை உருவாக்கதக்க வகையில் செயற்படவும் எதிர்கால சந்ததியினர் மத்தியில் வாசிப்பு திறனை மேம்படுத்த வேண்டியது எமது கடமையே.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"

**செ.அனுத்திரா**
ஊடகக் கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு கோரி ராகுல் காந்தி அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம்

இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தை நடத்தி தமிழக மீனவர்களை விடுவிக்குமாறு கோரி இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அந்த நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் ராகுல் காந்தி இந்த கடிதத்தை அனுப்பியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, இந்தியாவின் டெல்லிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை ஜனாதிபதியிடம் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தவும் அவர் கோரியுள்ளார்.



அத்துடன், மீன்பிடி படகுகளையும் இலங்கை கடற்படை கைப்பற்றுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், குறித்த மீன்பிடி படகுகளை மீட்க இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும் எனவும் இந்திய எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத்தை இரத்து செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி எழுதியுள்ள கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இலங்கை சிறைகளில் 141 தமிழக மீனவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளதாக இந்திய அமைச்சர் கீர்த்தி வரதன் சிங் தெரிவித்துள்ளார்.

இதில் 96 பேர் தண்டனை பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தமிழ்நாட்டு மீனவர்களின் 198 படகுகளையும் இலங்கை அரசாங்கம் கைப்பற்றியுள்ளதாக இந்திய அமைச்சர் கீர்த்தி வரதன் சிங் சுட்டிக்காட்டியுள்ளார்.



# ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவுக்கு ஆதரவாக 269 எம்.பிக்கள் வாக்களிப்பு

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா மீது நடத்தப்பட்ட ஆரம்ப சுற்று விவாதத்துக்குப் பிறகு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் மசோதாவுக்கு ஆதரவாக 269 எம்பிக்கள் வாக்களித்தனர். எதிராக 198 எம்.பிக்கள் வாக்களித்தனர்.

இந்தியா முழுவதும் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களுக்கு ஒரே கால கட்டத்தில் தேர்தல் நடத்தும் நோக்கில் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இந்த திட்டம் தொடர்பாக ஆய்வு செய்ய முன்னாள் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அந்த குழு தனது அறிக்கையில், இந்த மசோதா சட்டமானால் அது நாட்டுக்கு நன்மை பயக்கும் என தெரிவித்தது. மேலும், இந்த மசோதாவை நிறைவேற்ற அரசியல் சாசனத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்தும் சுட்டிக்காட்டியது.

இந்த திருத்தங்களை மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஏற்றது. இதையடுத்து, ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்துக்காக அரசியல் சாசனத்தில் 129 ஆவது திருத்தத்தை மேற்கொள்வதற்கான மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் மக்களவையில் இன்று பிற்பகல் தாக்கல் செய்தார்.

இதையடுத்து ஆரம்ப சுற்று விவாதம் நடத்தப்பட்டது. அப்போது, இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. மசோதாவை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் எம்.பி. மணீஷ் திவாரி, “ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாட்டின் மீது தாக்குதல் நடத்துகிறது. இந்த மசோதாவை பரிசீலிப்பது இந்த அவையின் சட்ட திறனுக்கு அப்பாற்பட்டது. அதைத் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.” என்று கூறினார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி கல்யாண் பானர்ஜி, “ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பை பாதிக்கிறது. சட்டப்பிரிவு 82 மற்றும் துணைப்பிரிவு 5 அனைத்து அதிகாரத்தையும் தேர்தல் ஆணையத்துக்கு வழங்குகிறது. உலகம் அழியும் வரை ஒரே கட்சியால் ஆட்சி அமைக்க முடியாது.” என கூறி மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். சிவசேனா (யு.பி.டி) எம்.பி. அனில் தேசாய் உள்ளிட்டோரும் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

அரசியல் சாசன திருத்தம் கோரும் இந்த மசோதாவுக்கு மக்களவையில் ஆதரவு இருக்கிறதா என்பதை அறிய வாக்கெடுப்பு நடத்துமாறு எதிர்க்கட்சிகள் சபாநாயகரை கேட்டுக் கொண்டன.

இதனை சபாநாயகர் ஓம் பிர்லா ஏற்று, வாக்கெடுப்பு நடத்தினார். இதில், மசோதாவுக்கு ஆதரவாக 269 உறுப்பினர்களும் எதிராக 198 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.





# ரஷ்ய தலைநகரில் குண்டுவெடிப்பு: உயர்மட்ட இராணுவ தளபதி பலி

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இடம்பெற்ற வெடிவிபத்தில் ரஷ்ய இராணுவத்தின் உயர்மட்ட ஜெனரல் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

அணுசக்தி, உயிரியல், இரசாயன பாதுகாப்புப் படைகளின் (என்.பி.சி.) தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் இகோர் கிரில்லோவ் இன்று செவ்வாய்க் கிழமை அதிகாலை குடியிருப்புத் தொகுதியிலிருந்து வெளியேறும்போது ஸ்கூட்டரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சாதனம் வெடிக்கச் செய்யப்பட்டதாக ரஷ்ய விசாரணைக் குழு தெரிவித் துள்ளது.

கிரில்லோவின் உதவியாளரும் கொல்லப்பட்டுள்ளார் என அது மேலும் கூறியது.

ஒக்டோபரில், பிரிட்டன், கிரில்லோவ் மீது பொருளாதாரத் தடைகளை விதித் தது, அவர் உக்ரைனில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதை மேற்பார்வையிட்டதாகவும், “கிரெம்ளின் தவறான தகவல்களுக்கு ஒரு முக்கிய ஊதுகுழலாக” செயல்பட்டதாகவும் தெரிவித்தது.

திங்களன்று, உக்ரைனின் இரகசிய சேவையான SBU, அவர் மீது “தடைசெய் யப்பட்ட இரசாயன ஆயுதங்களை பெருமளவில் பயன்படுத்தியதற்கு பொறுப்பு” என்று டெலிகிராமில் குற்றம் சாட்டியிருந்தது.

ரஷ்யாவின் முக்கிய புலனாய்வு ஆணையம், “இரண்டு படைவீரர்களின் கொலைக்கு குற்றவியல் வழக்கை ஆரம்பித்துள்ளது” என்று கூறியது. “விசாரணையாளர்கள், தடயவியல் நிபுணர்கள் மற்றும் செயல்பாட்டு சேவை கள் சம்பவ இடத்தில் பணியாற்றி வரு கின்றனர்,” என்று அது தெரிவித்தது.



# பசுபிக் கடலில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: சுனாமி எச்சரிக்கை

பசிபிக் கடலில் வனுவாட்டு தீவுக்கு அருகே சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங் கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 7.4 ஆக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வனுவாட்டு கடற்கரைக்கு சற்று தொலைவில் இன்று செவ்வாய்க்கிழமை ஏற்பட்டதாக ஐக்கிய அமெரிக்க நில அளவாய்வுத் துறை தெரிவித்துள்ளது.

போர்ட்– விலாவிற்கு மேற்கே 30 கி.மீ. தொலைவில் 43 கி.மீ ஆழத்தில் தாக்கி உள்ளது.

இதனால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என அந நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

இந்நிலையில் சுமார் 330,000 மக்கள் வசிக்கும் 80 தீவுகளைக் கொண்ட வனுவாட்டு தீவுகள் மற்றும் நியூசிலாந்துக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





கனடா முரசு

பக்கங்கள் 03

செவ்வாய்க்கிழமை 17/12/2024

## புதிய நிதி அமைச்சரை நியமிக்கின்றார் ட்ரூடோ

கனடாவின் நிதி அமைச்சர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ள விடயம் கனடா அரசியலில் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

கனடா நிதி அமைச் 03▶



# திடீரென பதவி விலகினார் கனடாவின் துணைப் பிரதமர்

**கனடாவின் துணைப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.**

**கனடாவின் நிதியமைச்சரும், துணைப் பிரதமருமான கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் வருடாந்திர அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக, பதவி விலகியுள்ளார் என கூறப்படுகிறது.**

**இந்த விடயத்தை அந்நாட்டு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு கடிதம் மூலம் அவர் அறிவித்துள்ளார்.**

இதேவேளை, இந்த கடிதத்தில் கனடாவின் வளர்ச்சிப் பாதையில் இருவருக்கும் இடையே கருத்து வேறு பாடு இருக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்தோடு, ஜஸ்டின் ட்ரூடோ தனது அரசில் உயர்நிலை பொருளாதார ஆலோசகராக இருப்பதில் தனக்கு விருப்பம் இல்லை என்று கடந்த வாரம் தெரிவித்திருந்ததோடு, தனது பதவியை விட்டு விலகுவதாகவும் கிறிஸ்டியா ஃபிரீலேண்ட் அறிவித்திருந்தார்.

# கனடாவில் அடகு கடன் துறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன

கனடாவில் வீடுகளை கொள்வனவு செய்வதற்கு அதிகளவானவர்கள் அணுகும், அடகு கடன் துறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதனடிப்படையில், அடகு கடனுக்கான காப்புறுதி கட்டணங்கள் குறைக்கப்பட உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வீடு கொள்வனவு செய்வோருக்கு பெரும் நன்மை அளிக்கும் என வீட்டு மனை துறை சார் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

காப்புறுதி கட்டண குறைப்பானது வீடு கொள்வனவு செய்பவர்களின் கொள் 03▶





# உயிரிழந்த இந்திய இளைஞருக்கு சக ஊழியர்கள் இறுதி மரியாதை

கனடாவில் பாதுகாவலராக பணிக்கு சேர்ந்த இந்திய இளைஞர் ஒருவர் கொடூரமாகக் கொல்லப்பட்ட நிலையில், அவரது சக பாதுகாவலர்கள் அவருக்கு பேண்டு வாத்தியம் முழங்க இறுதி மரியாதை செலுத்தும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிலிருந்து ஒன்றரை யாண்டுகளுக்கு முன் ஹர்ஷன்தீப் சிங் (வயது 20) கனடாவுக்கு சென்றார்.

சிங் ஆல்பர்ட்டா மாகாணத்தி லுள்ள எட்மண்டனில் பாதுகாவலராக பணிக்கு சேர்ந்து மூன்று நாள்கள் ஆன நிலையில், இம்மாதம், அதாவது, டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரைக் கொலை செய்ததாக Evan Chase Rain, (வயது 30) மற்றும் Judith Saulteaux (வயது 30) என்னும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்நிலையில், பணியில் சேர்ந்து மூன்று நாள்களே ஆன நிலையில் கொல்லப்பட்ட சிங்குக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

அந்த நிகழ்ச்சியில், சிங்குக்கு கௌரவம் செலுத்தும் வகையில், அவரது சக பாதுகாவலர்களும், அவசர உதவிக் குழுவினரும் இணைந்து அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

250 இற்கும் அதிகமானோர் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில், பேண்டு வாத்தியம் முழங்க சிங்குக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டதைக் காட்டும் காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.










# கனடாவில் வரி விடுமுறை ஆரம்பம்

கனடாவில் வரி விடுமுறை திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய பண்டிகை காலத்தில் மக்களுக்கு வரிச்சலுகை வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வார இறுதி நாள்கள் தொடக்கம் இந்த வரிச்சலுகை (வரி விடுமுறை) அறிமுகம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரண்டு மாத காலப் பகுதிகளுக்கு இந்த வரிசலுகை அறிமுகம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் நாட்டில் வரி செலுத்துவோர் சுமார் 1.5 பில்லியன் டொலர்கள் வரையில் சேமிக்க முடியும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரையில் இந்த வரி விடுமுறை திட்டம் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மளிகை பொருள்களான பழங்கள், மரக்கறிகள், பால் உற்பத்திகள், இறைச்சி வகைகள், கால்நடை உற்பத்திகள், முட்டை போன்ற பொருட்களுக்கு பெறுமதி சேர்வரி அளவீடு செய்யப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சாண்ட்விச், சலாட் வகைகள், சமைத்த உணவுகள், பேக்கரி உற்பத்திகள் போன்றவற்றிற்கான வரிகளும் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


மதுபானம் அல்லாத பான வகைகளுக்கான வரிகளும் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வனவு இயலுமையை மேலும் அதிகரிக்கும் என குறிப்பிடப்படுகின்றது.

கனடாவில் வீடு ஒன்றை அடகு கடன் அடிப்படையில் கொள்வனவு செய்பவர்கள் பெரும் சவால்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளது.

இந்தக் கட்டண குறைப்பானது அதிக எண்ணிக்கையிலானவர்கள் வீடுகளை கொள்வனவு செய்வதற்கு தூண்டப்படகூடும் என தெரிவிக்கப்படுகின்றது.



## புதிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சரான கிறிஸ்டினா ஃப்ரீலேண்ட் (Chrystia Freeland), பிரதமர் ட்ரூடோவுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து, திங்கள் கிழமை தனது இராஜினாமாவை அறிவித்தார்.

இந்நிலையில், Dominic LeBlanc (வயது 57) என்பவரை நாட்டின் நிதி அமைச்சராக ட்ரூடோ தேர்ந்தெடுத்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

டொமினிக், இன்று மாலை நிதி அமைச்சராக பதவியேற்பார் என அரசு வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

டொமினிக், தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றிவருகிறார்.

கனடா அமெரிக்க எல்லை வழியாக புலம்பெயர்ந்தோரும், போதைப்பொருள்களும் அமெரிக்காவுக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தவில்லையென்றால் கனடா மீது 25 சதவிகித வரி விதிப்பதாக ட்ரம்ப் மிரட்டியுள்ளார்.

இந்த இக்கட்டான நேரத்தில், எல்லை பாதுகாப்பை கண்காணிக்கும் பொறுப்பை கவனித்து வருபவர் டொமினிக் என்பது குறிப்பிடத்தக்கது.